www.padippakam.com

# தமிழீழ

# ரத்தினமே !

# சபாரத்தினம்



தமிழ் மக்களின் ஓரே உன்னத தலைவரும் இணைந்த இயக்கங்களின் இணையற்ற கள நாயகருமான தமிழ் ஈழ விடுதலை இயக்கத் தலைவர் சிறீ சபாரெத்தினம் அவர்கள் 06-05-1986 செவ்வாய் அன்று, தனி நபர் பயங்கரவாதக் குழுவான தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் சுற்றி வளைக்கப்பட்ட போது, போராடி வீர மரணமடைந்தார்.

எம் தலைவா !
இயக்கத்தின் ரத்தினமே !
சிறீ. சபாரத்தினம் !
நின் மறைவால் விழியில்
நீர் நிறைந்தாலும் !
நின் மறைவால் நெஞ்சில்
கனம் சேர்ந்தாலும் !
ஈழத்தின் வெற்றிக்கு
நாளும் நின்று—நீ
நம் நாட்டுச் சரித்திரத்தை
கடமை தன்னை !
நாளாந்தம்சொன்னசொற்கள்
காதில் இன்னும் ஓயாமல் !
ஒலிக்குதய்யா !
என்றாலும் தான்
உன் பேரிழப்பை ஈடு செய்ய
என்ன செய்வோம் நாங்கள்?
ஒன்று மட்டும் சத்தியம் !
நீ மறைந்தால் தானுடனே
இயக்கம் சாகும்—என்று
மாறுகக் கணக்கிட்டார்
கயவர் இன்று
குலத்தைக் கெடுக்க வந்த
கோடாரிக் காம்பே போல்
குழுமதியர் செய்திட்டார்
படுபாவம் புரிந்திட்டார்
எம் இறைவா ! உன்னை
வஞ்சித்தார்
நீ மறைந்த இந்நாளில்
ஓயாமல் கூளுரைகள்
தந்தோம் அண்ணா !
நீ சொன்ன சொற்கள்
எம் நெஞ்சில் !
நீ எடுத்த துப்பாக்கி
எம் கையில் !
தமிழீழ விடுதலை கிட்டும் வரை
போராட்டம் ஓய்வதில்லை
அதுவரையில் நீ கண்ட
தமிழீழ விடுதலை இயக்கமும்
ஓய்வதில்லை !

நின் பாதையில் தொடர்ந்து நடைபோடும்
தமிழ் ஈழ விடுதலை இயக்கம்(TELO)
பம்பாய் கிளையகம்